# கிண்ணிமங்கலம் எழுப்பும் கேள்விகள்

**முனைவர் மீ. மருதுபாண்டியன்**

*காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், மதுரை*

கிண்ணிமங்கலம் மதுரையிலிருந்து சுமார் 16 கி.மீ தொலைவில் செக்கானூரணிக்கு அருகில் உள்ளது.கொரானா பெருந்தொற்று காலத்தில் மிகப்பெரிய அளவில் பேசப்பட்ட இடம் இது. இங்குள்ள மடத்தின் பெயர், ஏகநாதன் மடம். மாதம்தோறும் சிறப்பான வழிபாடுகள் நடைபெறக்கூடிய இடம். இங்கு மூலிகை மருத்துவங்கள், சித்த மருத்துவ ஆலோசனைகள் போன்ற நிகழ்வுகளும் நடைபெறும்.

இங்கு உள்ள கோயிலில் தமிழி எழுத்துப் பொறிப்பு பெற்ற ஒரு தூண் கல்வெட்டினை கண்டறிந்தனர் நண்பர் காந்திராஜன் குழுவினர். அதனைப் பற்றிய பல விளக்கவுரைகளும் நாளேடுகளில் வந்தன. நெடுந்தூண் எழுப்பும் வழக்கம் சங்க காலத்திலேயே இருந்துள்ளது என்றும் அதன் தொடர்ச்சி இன்றளவும் இந்த பகுதியில் மக்கள் வழிபாட்டுடன் ஒன்றிவிட்டது என்றும் கூறினார். அவரது இந்த கருத்துக்கு மறுப்பாக இக்கட்டுரை எழுதுகிறேன்.

சங்க இலக்கியத்தில் கல்தூண் எழுப்பி வழிபடும் முறை இல்லை. மாறாக மரத்தூண் எடுத்து வழிபடும் மரபுதான் இருந்துள்ளது.புறநானூற்று பதிகத்தில் வரும் ‘‘கலி கெழு கடவுள் கந்தம் கைவிட’’[1] எனும் பாடலின் பொருளின் படி கந்து எனும் ஒருவகை வழிபாடு இருந்துள்ளது. அதாவது மரத்தால் ஆனதூண் வழிபாடு இருந்துள்ளது என்பது இதன் பொருள். அகனாநூறும் இதையே வலியுறுத்துகின்றது.[2] மற்றொரு பாடல் வரியில் மன்றத்திற்கு உட்பட்ட பொதியில் உள்ள கந்தானது சிதைந்து அரித்த நிலை பற்றி உரைக்கிறது.[3] இங்கு அரித்தல் என்பது கவனிக்கப்பட வேண்டியது. மரம் தான் அரிக்கும் தன்மை கொண்டதே அன்றி கல் இல்லை. ஆகவே, கந்து வழிபாடு என்பது மக்கள் கூடும் பொதியில் (மன்றம்) உள்ள மரத்தால் ஆன தூண் வழிபாடே தவிர அது கல்தூண் வழிபாடு கிடையாது என்பதை உறுதியாக கூறலாம். இதற்கு மேலும் வலு சேர்க்கும் விதமாக அரியலூர் மாவட்டத்தில் உள்ள பொன்பரப்பி எனும் கிராமத்திற்கு அருகில் உள்ள கலியபெருமாள் கோயில் தூண் உள்ளது. அக்கோயிலில் இன்றுக்கு வரைக்கும் மரத்தால் ஆன தூண் வழிபாடு உள்ளது. இதனை சங்க காலத்தில் நிலவிய கந்து வழிபாட்டின் எச்சமாக கருதலாம். அசோகர் காலத்திய மரத்தால் ஆன தூண் வழிபாட்டின் எச்சம் கங்கை சமவெளியில் மத்திய தொல்லியல் நிறுவனத்தால் நடத்தப்பட்ட அகழாய்வில கிடைத்துள்ளது. இது இந்தியாவில் மட்டுமல்லாது உலக நாடுகளில் பெரும்பாலான இடங்களில் மரத்தினை தூணாக வைத்து வழிபடும் மரபு இருந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. மேலும் பெருங்கற்கால மக்களின் காலத்தில் ஈமச் சின்னங்களில் அதிகம் பயன்படுத்தப்படுவது கற்கள் என்பதால், அமங்கலத்தின் குறியீடாக மக்கள் கருதியுள்ளனர்.[4] பிறகு எப்படி கல்லில் தூண் வைத்து வழிபடும் மரபு இருந்திருக்க முடியும் என்பதினை சற்று கவனிக்க வேண்டும். மக்கள் வழிபாட்டுத்தலங்களில் வேண்டுதலுக்காக விளக்கு தண்டு வைக்கும் முறை உள்ளது என்று திரு.காந்திராஜன் அவர்கள் கருதுகின்றார்.அது விளக்கு தண்டு அல்ல. அதற்கு நொந்தா விளக்கு (i.e. perpetual lamp) என்பது தான் பொருள்.அதன் பயன்பாடானது முதன் முதலில் பல்லவ மன்னன் நந்திவர் மனின் கல்வெட்டில் வருகிறதே தவிர அதற்கு முந்தைய கல்வெட்டுகளில் காணப்படவில்லை.

‘‘ஏகன் ஆதன் கோட்டம்’’ என்பது லிங்கத்தில் எழுதப்படவில்லை. இது கரடுமுரடான தூண் அமைப்புகல். இதனை நடுகல் என்பதே சரி என்று மூத்த பேரராசிரியர் திரு.இராஜவேலு ஐயா கூறுகிறார். இதற்கு மேலும் ஒரு சான்றினைச் சேர்த்து மறுப்பு தெரிவித்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அம்மடத்தின் சாமியார் அருளானந்தம் அடிகளார் ஒரு கருப்பு சிவப்பு பானை கலன் ஒன்றையும், கார்னீலியன் மணிகளையும் எங்களிடம் காண்பித்தார்.

ஆகையால் இதனைக் கொண்டு இதனை பெருங்கற்காலக் கட்டத்தினை சேர்ந்ததாக நாம் கூறமுடியுமா?. அவ்வாறெனில் 1863ல் நிலவியல் அறிஞர் ராபர்ட் புரூஸ் புட் அவர்கள் விருதுநகர் மாவட்டம் ஆவியூரில் ஒரு பழைய கற்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவி ஒன்றையும் கண்டுபிடித்தார். அதற்காக அக்கிராமத்தினை பழைய கற்கால மக்கள் வாழ்ந்த இடமாக கருதமுடியுமா?.

மேலும் இக்கல்வெட்டில் வரும் ‘‘கோட்டம்’’ எனும் சொல்லிற்கு நேரடியான பொருள் சுடுகாடு அல்லது பள்ளிப்படை என்று ஏதாவது இலக்கியம் சுட்டுகிறதா என்று பார்த்தால், சிலப்பதிகாரத்தில் கோயில் என்ற பொருளில்தான் கோட்டம் என்ற சொல் குறிப்பிடப்படுகிறது.[5] இது தவிர அறை,[6] பாசறை,[7] சிறைச்சாலை,[8] இடம்[9] என்ற பொருளிலும் வருகின்றது பள்ளிப்படை என்றோ, சுடுகாடு என்றோ சுட்டப்படவில்லை.

‘கோட்டம்’ என்பதற்கு ‘வளைவு’[10] ‘பசுக்கூட்டம்’[11] மற்றும் ‘பசுக்கொட்டில்’[12] என்ற பொருள்கள் உள்ளதையும் நோக்கவேண்டும்.முதலில் கோட்டம் என்பதற்கு வளைவு எனப் பொருள் கொண்டால் இது ஒரு நிலவியல் பிரிவு என்று சுப்பிரமணிய அய்யர் கூறுவார்.[13] மேற்குறிப்பிட்ட மற்ற இரண்டு சொற்களும் ஒரே பொருளைத் தருவன. அதன்படி கோட்டம் என்றால் ஆடு மாடுகளை அடைத்து வைக்கும் இடம் என்றும் கருதலாம். ஆகவே, ஏகன் ஆதன் கோட்டம் என்பது ஒரு தனிப்பட்ட நபரின் பசுக்களை அடைத்து வைக்கும் இடமாகக் கூட இருக்கலாம். ஏனெனில் கல்வெட்டு கிடைத்துள்ள இடமானது சுற்றி மேய்ச்சல் நிலங்கள் அதிகமாக உள்ள முல்லை நிலமாகவே உள்ளது.

இங்கு முற்கால பாண்டிய வட்டெழுத்து கல்வெட்டு ஒன்றும் உள்ளது. கல்வெட்டில் இறுத பகுதி மட்டுமே உள்ளது. “ஏகன் ஆதன்“ என்பது வட்டெழுத்தில் “ஏகநாதன்“ ஆக எழுதப்பட்டுள்ளது. இதன ் காலம் 6-7 ஆம் நூற்றாண்டாகலாம். முதல் பகுதி கிடைத்தால் அரசர் பெயர் ஆட்சி ஆண்டு ஆகியவற்றை உறுதியாக நிறுவலாம் என்று பேராசிரியர் இராஜவேலு ஐயா கூறுகிறார். அவ்வாறெனில், அதாவது இவ்விடம் பள்ளிப்படை என்பதும், 6-7ஆம் நூற்றாண்டுகளில் இயக்கத்திலிருந்தது என்பதும் உண்மையெனில் சமண, பௌத்த பிரிவுகளை எதிர்த்து கல்வி, மருத்துவம் சார்ந்து மக்களிடையே சேவை செய்த சைவ பிரிவுகளுள் ஒன்றான லகுளீசபாசுபத பிரிவைச் சார்ந்த மடமாக இது இயங்கியிருக்க வேண்டும் (கொங்கர் புளியங்குளம், கீழகுயில்குடி போன்ற சமண இயங்குதளங்கள் கிண்ணிமங்கலம் அருகே இருப்பதை கவனிக்க வேண்டும்). ஆனால் லகுளீசபாசுபத நெறிக்கான எவ்வித அடையாளங்களையும் இம்மடம் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்த கேள்வி ஞானமும் மடம் சார்ந்தவர்களிடம் இல்லை.

6 மற்றும் 7ம் நூற்றாண்டுகள் வட்டெழுத்து வளர்ச்சி பெற்ற காலம் தான். ஆனால் கிடைக்கும் வட்டெழுத்துக் கல்வெட்டானது வெறும் கீறல் போன்ற அமைப்பில் கிடைத்திருக்கிறது. அதோடு தெளிவற்றதாகவும் உள்ளது ஏன்?.

வட்டெழுத்தில் ஓலைச்சுவடி கிடைப்பதும் இதுவே முதல் முறை. வட்டெழுத்து ஒழிந்தகாலத்தில் பழையபடியைப் பார்த்து அப்படியே 19 ஆம் நூற்றாண்டில் படி எழுதி உள்ளனர். கூடவே இது நகலின் நகல் என எழுதி தமிழில் கையொப்பம் இட்டுள்ளனர். அரிதான ஓலைச்சுவடி இது. இது போக சில தமிழ் ஓலைச்சுவடிகளும் உள்ளன என்று கூறுகின்றனர். பழைய படியைப் பார்த்து அப்படியே 19ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வட்டெழுத்து சுவடியைப்போல், ஏன் மற்ற சுவடிகளையும் நகலுக்கு நகலாக எடுக்கவில்லை என்பது கேள்வியாக உள்ளது. இவ்வட்டெழுத்து ஓலைச்சுவடியானது புதிதாக, சரியான முறையில் வெட்டி ஒழுங்குமுறையுடன் எழுதப்பட்டதாக உள்ளது. ஆனால் அவர் வைத்திருக்கும் ஓலைச்சுவடிகளில் பெரும்பான்மையானது நிறைய ஏடுகளைக் கொண்டதாக இருக்கும்போது, வட்டெழுத்து ஓலைச்சுவடி மட்டும் ஏன் ஐந்து ஏடுகளில் உள்ளது.மேலும் எல்லா ஓலைச்சுவடிகளையும் 19ம் நூற்றாண்டில் படி எடுத்திருந்தால் எல்லா ஓலைச்சுவடிகளிலும் நகலுக்கு நகல் என்று எழுதியிருக்க வேண்டும். குறிப்பாக ஒரே ஒரு வட்டெழுத்து ஓலையில் மட்டும் ஏன் நகலுக்கு நகல் என்று எழுதியிருக்க வேண்டும்?.

கி.பி.1722 ம் ஆண்டைச் சேர்ந்த விஜயரெங்க சொக்கநாதனின் பலகைகல்வெட்டு ஒன்று சமீபத்தில தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை அதிகாரிகளால் இம்மடத்திற்குள் கண்டறியப்பட்டு படிக்கப்பட்டது. அதில் மொத்தம் 43 வரிகள் உள்ளன[14]. அவற்றில் இருபத்தி ஆறாவது வரியில் “மீனாட்சி சுந்தரரேசுவரா் சுவாமி சன்னதி” என்று உள்ளது. இக்கோயில் குறித்து அம்மடத்தின் அருளானந்தம் அடிகளார் அவர்களிடம் கேட்கும் பொழுது, அவ்வரியில் உள்ள கோயில் தற்போதைய மதுரை மீனாட்சி அம்மன் கோவில் என்றும், அது பள்ளிப்படை கோயில் என்றும் கூறினார்.[15] இதுவரைக் கண்டறியப்பட்ட மீனாட்சியம்மன் கல்வெட்டுகளுள் பள்ளிப்படைக் குறித்த கல்வெட்டுக்கள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் இடம்பெற்றிருக்கும் கல்வெட்டுகளுள் 1898 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட கல்வெட்டுகள் எதிலும் இவ்வுண்ணாழிகை இறைவி மீனாட்சியம்மன் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை. மாறாக திருக்காமக்கோட்டத்து ஆளுடைய நாச்சியார் என்றே குறிப்பிடப்படுகிறாள்.[16] அவ்வாறிருக்க இவா் சொல்வது எப்படி பொருந்தும்.

முதலாம் நெடுஞ்சழியன் (பொ.ஆ.273), இரண்டாம் நெடுஞ்செழியன் (பொ.ஆ.210), இவா்கள் இருவரும் சங்ககால பாண்டிய மன்னா்கள், அதற்கடுத்து வரும் பராந்தக நெடுஞ்சடையன் (பொ.ஆ.765-815), பராந்தக வீரநாராயணன் (பொ.ஆ.880-905) இருவரும் முற்காலப் பாண்டிய மன்னா்கள். இவா்களில் மடத்தில் கிடைக்கும் பலகைக்கல் கூறும் நெடுஞ்சழியன், பராந்தகன் என்பவா்கள் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவா்கள் என்பது தெரியவில்லை. மன்னரின் ஆணையினை செப்பு பட்டயத்தில் முதலிலும், இரண்டாவதாக கல்லிலும் வெளியிடுவார்கள். ஆனால் கல்வெட்டையோ, செப்புப் பட்டயத்தையோ திருத்திக் கொடுக்கும் பொழுது தனது முன்னோர்கள் அனைவரின் பெயரையும் சொல்லிகொடுப்பது தான் மரபு.அவ்வாறெனில் இந்த கல்வெட்டில் பாண்டியரின் முன்னோர் பெயா்கள் கூறபடவில்லை. நாயக்க பேரரசா்கள் அவ்வாறு கொடுப்பதில்லை என்று வைத்துக்கொண்டால் நெடுஞ்சழியன், பராந்தக பாண்டியனின் பெயா்களைக் குறிப்பிடுவது ஏன்?.[17]

பள்ளி என்னும் சொல் முதன் முதலில் சிலப்பதிகாரத்தில் தான் வருகிறது. பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன்பிறகு தொண்டை நாட்டில் முதலாம் பராந்தகனால் எடுப்பிக்கப்பட்ட ஆதித்யேச்சுவரம்,[18] முதலாம் இராஜராஜனால் அரிஞ்சயனுக்காக எடுக்கப்பட்ட அரிஞ்சிகையீஸ்வரம்,[19] பஞ்சவன் மாததேவிக்காக முதலாம் இராஜேந்திரனால் கட்டப்பட்ட இராமநாதன் கோயிலும்,[20] பாண்டியநாட்டில் எடுப்பிக்கப்பட்ட பள்ளிமடமும் காணக்கிடக்கின்றன. ஆனால் இவை அனைத்தும் அரசன், அரசிக்காக எடுப்பிக்கப்பட்டவைகளாகும். ஆனால் கிண்ணிமங்கலத்தில் உள்ள பள்ளிப்படை அரசனுக்காக எடுப்பிக்கபடாமல் தனிமனிதருக்காக எடுப்பிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதுவும் ஐயத்தை ஏற்படுத்துகிறது.

மேலும் காலப்போக்கில் பள்ளிப்படை எனும் சொல் வெறுத்து ஒதுக்கப்பட்டுள்ளது. இராமனாதன் கோயிலிலுள்ள கல்வெட்டில் “பள்ளிப்படை” என்ற சொல்லை அழித்திருக்கிறார்கள் என்பதிலிருந்து அச்சொல் குறித்த வெறுப்புணர்ச்சியை உணரலாம்.[21] அப்படியிருக்கையில் இம்மடத்தில் மட்டும் தொடர்ச்சியாக பள்ளிப்படை எனும் சொல் புழக்கத்தில் இருப்பது ஆய்வுக்குரியது.பெரும்பாலும் பள்ளிப்படை கோயில்களுக்கு லகுலீச பாசுபத மகாவிரதிகள் பூசை செய்பவா்களாக இருந்துள்ளனர். பாண்டிய நாட்டில் லகுலீச பாசுபதம் செல்வாக்கு பெற்றிருந்த காலத்தில் தொடர்ச்சியாக பயன்பாட்டில் இருந்த இந்த மடத்தில் மட்டும் லகுலீசபாசுபதம் தொடா்பான ஒரு சான்றுகள் கூட கிடைக்கவில்லை என்பதும் வியப்பாக உள்ளது.

இது நடுகல் என்று ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், இதனுடைய காலத்தினை கி.பி.2 என்று வரையறுக்கலாம். இதேபோன்றதொரு கல்வெட்டு காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள நெட்ரம்பாக்கம் எனும் ஊரில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கத்தில் உள்ள தமிழியின் காலத்தினை ஒத்தது எனலாம். அதனுடைய காலமும் கி.பி.2.ஆனால் அச்சிவலிங்கத்தினை கண்டுபித்த பொழுது தமிழி எழுத்து தலைகீழாகத்தான் இருந்தது.அவ்வாரெனில் தமிழியினை வெறுத்து மேல் பகுதியினை கீழ் நோக்கி வைத்து சிவலிங்கமாக

அடையாளப்படுத்தியுள்ளனர். ஆகவே தான், அண்மைக் காலங்களாக சில கோயில்களைப் புதுப்பிக்க தோண்டும் போது அவற்றின் கற்பக்கிரகங்களின் கீழே மனித எழும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.[22]

கிண்ணிமங்கலத்தைச் சேர்ந்த அருளானந்த அடிகள் என்பவர் சோழவந்தானுக்கு அருகில் உள்ள கிண்ணிமங்கலம் என்ற ஊரில் பிறந்து, பின்பு சோழவந்தானுக்குச் சென்று அங்கு ஒரு மடத்தினை நிறுவினார். அம்மடத்தின் பெயர் ‘கிண்ணிமங்கல மடம்’ என்றும் அதுவே பிற்காலத்தில் கிண்ணிமடமாயிற்று.[23] இதன் காலம் 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அம்மடத்திலேயே தான் செண்பகம் பிள்ளை, அரசப்ப பிள்ளையார், சிவபிராகச சுவாமிகள், அரசஞ்சண்முகனார், சௌரிப்பெருமாள் போன்றோர் தமிழ் பணியாற்றியுள்ளனர். அவர்களில் சௌரிப்பெருமாள் பிற்காலத்தில் தேவஸ்தான ஹிந்து கல்லூரியில் ஆக்டிங் தமிழ்ப் பண்டிதராகவும், வாணியம்பாடி மஹம்மதியர் கல்லூரில் தமிழைக் கற்றுக்கொடுக்கும் தமிழ்ப் பண்டிதராகவும், பின்பு மதுரை செந்தமிழ் நூலாராய்ச்சி ஆசிரியராக விளங்கினார். இவர்தான் சங்கஇலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகையினை பதிப்பித்தவர் என்பது முக்கியமானதாகும். தமிழ்வளர்ச்சியில் இப்படியாக பெரும்பங்காற்றியவர்களை உருவாக்கிய மடமாக சோழவந்தான் மடம் உள்ளது.இம்மடத்தில் பயின்ற தமிழறிஞர்களில் ஒருவர் கூட செக்கானூரணிக்கு அருகில் உள்ள கிண்ணிமங்கலத்தினை பற்றி ஒரு இடத்தில் கூட பேசவில்லை. சோழவந்தானில் இயங்கும் கிண்ணிமடத்திற்கும், செக்கானூரணிக்கு அருகில் இயங்கும் கிண்ணிமங்கல மடத்திற்குமான தொடர்புகள் என்ன?என்பது கேள்வியாக உள்ளது.

மேலும் இங்கு அறியப்படும் மூன்று கல்வெட்டுகளின் மெயத்தன்மையும் சந்தேகத்திற்கிடமாக உள்ளன. தமிழி எழுத்தில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டை, ஏழு (அ) எட்டாம் நூற்றாண்டில் வட்டெழுத்தில் எழுதும் போது அவர்களுக்கு தமிழி எழுத்தைத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதே போல 1722 ம் ஆண்டில் விஜயரங்க சொக்கநாதர் காலத்தில் தமிழில் கல்வெட்டை எழுதியவர்களுக்கு தமிழி, வட்டெழுத்துக்கள் தெரிந்திருக்க வாய்பில்லை.மூன்றாம் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளபடி நெடுஞ்செழியன், பராந்தகபாண்டியன் காலப் பட்டயங்கள் எந்த எழுத்தில் எழுதப்பட்டிருந்தன. அவற்றைப்பார்த்து இக்கல்வெட்டு வெட்டப்படடிருந்தால் அப்பட்டயங்களின் இன்றைய நிலை என்ன?.

வட்டெழுத்துக் கல்வெட்டும் கீறல் கல்வெட்டாக உள்ளது. அச்சமகாலத்தில் உள்ள சமணமலை, முத்துப்பட்டி போன்ற ஊர்களிலுள்ள வட்டெழுத்துகளோடு சற்றும் ஒத்துப் போகவில்லை.எனவே இது திட்டமிட்டு எழுதப்பட்டிருக்கலாம். இரண்டாயிரம் ஆண்டுகாலமாக ஒருமடம் குறிப்பிட்ட குடும்பத்திற்கு பாத்தியப்பட்டதாக நிறுவ எடுக்கப்பட்ட முயற்சியாக இருக்க வாய்ப்புகள் உள்ளன.

இதுபோன்ற செயல்கள் இதற்கு முன்பு வரலாற்றில் செய்யப்பட்டிருப்பது அனைவரும் அறிந்ததே. சில ஆண்டுகளுக்கு முன்பு திருப்பரங்குன்றம் மலையில் ‘மூநகர மூசகதி’ என்ற தொடர் கொண்ட ஒரு தமிழி கல்வெட்டைக் கண்டறிந்ததாக ஆவணம் இதழில் வெளியிடப்பட்டது.[24] அடுத்த ஓரிரண்டு ஆண்டுகளில் அது போலி என்று அறியப்பட்டது.

20 ஆண்டுகளுக்கு முன்பு கோயம்புத்தூரில்[25] ஒருவர் சுட்டமண் ஓடுகளில் தமிழி எழுத்தில் ‘எருமிநாடு குமிழூர்’ என்ற சிந்தன்னவாசல் கல்வெட்டைத் திரும்பத் திரும்ப எழுதி தான் கண்டுபிடித்ததாக விற்று காசாக்கி வந்தார். பின்பு அது போலி என கண்டறியப்பட்டு அவர் அதைத் தயாரித்த இடத்திற்கே போய்ப்பார்த்து உறுதி செய்தார்.

இவ்வாறான முயற்சிகள் தமிழக வரலாற்றில் புதிய கண்டுபிடிப்புகளின் நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கி அகழாய்வுத் தரவுகளையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் படி வைத்துவிட்டது. இக்காரணங்களுக்காக கிண்ணிமங்கலம் வரலாற்றுத் தடயங்களை முழுமையாக நாம் உடனடியாக ஏற்க முடியாத நிலையில் உள்ளோம். மிக எச்சரிக்கையோடு இதை நாம் அணுகவேண்டும். 200 ஆண்டுகளுக்கு முந்திய ஓலைகளில் வட்டெழுத்தை எழுதக்கூடியவர்கள் தமிழி, வட்டெழுத்துக் கல்வெட்டுகளையும் அண்மைக்காலத்தில் ஏன் எழுதியிருக்கக் கூடாது என்று கேள்வி எழுவது நியாயம் தானே.

**மேற்கோள்கள்**


1. கலி கெழு கடவுள் கந்தம் கைவிடப்
   பலி கண் மாறிய பாழ்படு பொதியில்
   நரை மூதாளர் நாய் இடக் குழிந்த
   வல்லின் நல் அகம் நிறைய, பல் பொறிக் (புறம் 52:12)
2. புற்றுடைச் சுவர புதல் இவர் பொதியில்,
   கடவுள் போகிய கருந் தாட் கந்தத்து
   உடன் உறை பழமையின் துறத்தல் செல்லாது
   இரும் புறாப் பெடையொடு பயிரும்
   பெருங் கல் வைப்பின் மலைமுதல் ஆறே? (அகம்: 307:11-15
3. பல் ஊழ் புக்குப் பயன் நிரை கவர
   கொழுங்குடி போகிய பெரும் பாழ் மன்றத்து
   நரை மூதாளர் அதிர் தலை இறக்கி
   கவை மனத்து இருத்தும் வல்லு வனப்பு அழிய
   வரி நிறச் சிதலை அரித்தலின், புல்லென்று,
   பெரு நலம் சிதைந்த பேஎம் முதிர் பொதியில் (அகம்:377:5-11)
4. கே.ஜி.கிருஷ்ணன்,
5. சிலப்பதிகாரம்- 14-10
6. மணிமேகலை: 6-59
7. பிங்கல நிகண்டு
8. சிறைச்சாலை : சீவகசிந்தாமணி-262
9. பிங்கல நிகண்டு.
10. நன்னூால் -25
11. பிங்கல நிகண்டு
12. வாயுசங்கிதை, பஞ்சாக்-58
13. பூங்குன்றன், உதவி இயக்குநர், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.
14. சொ.சாந்தலிங்கம் மற்றும் சிவானந்தம் (தொல்லியல் துறை கண்காணிப்பாளர்), அவர்களால் நேரில் படிக்கப்பட்டது.வெளியிடப்படாத கல்வெட்டு.
15. அருளானந்தம் அடிகளார், மடத்தின் மடாதிபதி, கிண்ணிமங்கலம், நேரில் சென்று சேகரிக்கப்பட்டது 10.10.2020
16. சொ.சாந்தலிங்கம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் கல்வெட்டுகள், அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை, வெளியிடப்படவில்லை, மதுரை, 2020
17. சொ.சாந்தலிங்கம் மற்றும் சிவானந்தம் (தொல்லியல் துறை கண்காணிப்பாளர்), அவர்களால் நேரில் படிக்கப்பட்டது.வெளியிடப்படாத கல்வெட்டு.
18. ARE 230/1903
19. SII.> Vol.III. No.16
20. ARE 271/1927
21. ARE.>1927> Part II>13.
22. ARA.>1915-1916 p.34
23. பொ.ராஜா., மதுரைப் பதிப்பு வரலாறு (1835-1950), வெளியிடப்படாத முனைவர் பட்டஆய்வேடு, மதுரை காமராஜர் பல்கலைகழகம், மதுரை, பக். 111-116
24. ஆவணம் இதழ் எண்: 24, பக்: 17 மற்றும் 280, 2013.
25. கு.தாமோதரன், தொல்லியல் நோக்கில் தமிழகம், பக்.70-74, சென்னை-1999.